1

# FIRST INFORMATION REPORT

## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109769

1. District : மாவட்டம் Thoothukudi PS: காவல்நிலையம் Vigilance and Anti-Corruption Thoothukudi Year: ஆண்டு 2023 FIR No.: மு.த.அ. எண் 04/2023 Date: நாள் 14.06.2023

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act, 1988 as Amended in 2018 Sections பிரிவுகள்: 7 r/w 12
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் 29.05.2023 மதியம் முதல் Date to : நாள் வரை 12.06.2023 at 09.45 hrs
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 14.06.2023 Time : நேரம் 08.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 14.06.2023 Time : நேரம் 08.30 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — கணினி தட்டச்சு மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 60 Kms North West Taluk Office, Kovilpatti
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.கி.ராஜாராம் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் கிருஷ்ணசாமி நாயக்கர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் (g) Address : முகவரி எண்.6/2836-E1, விமான் நகர், நியூ டவுண், புதிய பேருந்து நிலையம் அருகில், இளையரசனேந்தல் ரோடு, கோவில்பட்டி-628502.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   (1.) திருமதி.வசந்தமல்லிகா, வட்டாட்சியர், கோவில்பட்டி தாலுகா, தூத்துக்குடி மாவட்டம்,
   (2.) திரு.கிருஷ்ணன், ஓட்டுநர், கோவில்பட்டி வட்டாட்சியர் அலுவலகம், கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

----

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு ----

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் ---

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............J.Anitha..........Inspector of Police of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
[signature] 14/06/2023

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
J. Anitha 14/6/23

15. Date & Time of despatch to the court: 14.06.2023 at 09.45 hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ......J. ANITHA....
Rank: நிலை ....................No. எண் ..........
Inspector of Police,
VEAC,
Thoothukudi

**<u>Attachment to Column No.12 of First Information Report in Thoothukudi Vigilance and Anti-Corruption Cr.No.04/2023</u>**

பணிந்து அனுப்பப்படுகிறது.

இன்று 14.06.2023-ம் தேதி 08.00 மணிக்கு J.அனிதா, தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்தில் அலுவலில் இருந்தபோது திரு.கி.ராஜாராம் என்பவர் நிலையத்தில் ஆஜராகி ஒரு புகார் மனு கொடுத்தார். மேற்படி புகார் மனுவில் கோவில்பட்டி வட்டம், ஆலம்பட்டி வருவாய் கிராமத்தில் தனது மனைவி திருமதி.சந்திராவதி பெயரில் உள்ள (1) சர்வே எண். 233/1B1-ல் விஸ்தீரணம் 23½ சென்ட் இடம் மற்றும் (2) 233/1A9-ல விஸ்தீரணம் 13½ சென்ட் இடம் ஆகியவற்றினை வீட்டு மனைகளாக பிரித்து DTCP அப்ருவல் பெற்று விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும், அதற்கு கோவில்பட்டி தாசில்தாரிடம் தடையில்லா சான்று பெற மனு அளித்துள்ளதாகவும், அந்த தடையில்லா சான்றினை தனக்கு அளிப்பதற்கு கோவில்பட்டி தாலுகா அலுவலகத்தில் வட்டாட்சியராக பணிபுரியும் திருமதி.வசந்தமல்லிகா என்பவர் நேரடியாகவும் தனது டிரைவர் திரு.கிருஷ்ணன் என்பவர் மூலமும் ரூ.30,000/- (ரூபாய் முப்பதாயிரம்) லஞ்சமாக கேட்பதால் மேற்படி இருவர் மீதும் நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவித்திருந்தார். நான் அந்த புகார் மனுவை பெற்று அது குறித்து இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட கோவில்பட்டி தாசில்தார் திருமதி.வசந்தமல்லிகா மற்றும் ஓட்டுநர் திரு.கிருஷ்ணன் ஆகியோரை பற்றியும் இரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தையை அறிந்தும், புகார் மனு மீது ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அதனை கனம் தென்சரக காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகம், சென்னை அவர்களிடம் தொலைபேசியில் தெரிவித்து அனுமதி பெற்றும் புகார் மனுவின் தன்மைக்கேற்ப தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை குற்ற எண் 04/2023 பிரிவு 7 r/w 12 of PC Act, 1988 as Amended in 2018 படி 14.06.2023-ம் தேதி மாலை 08.30 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு : அனுப்புநர்: கி.ராஜாராம், வயது 64, த/பெ. கிருஷ்ணசாமி நாயக்கர், 6/2836-E1, விமான்

நகர், நியூ டவுண், புதிய பேருந்து நிலையம் அருகில், இளையரசனேந்தல் ரோடு, கோவில்பட்டி 628502. பெறுநர்: ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி. நான் மேற்படி முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் சுங்கத்துறையில் கண்காணிப்பாளராக பணியாற்றி 2019ம் வருடம் ஓய்வு பெற்றுவிட்டேன். எனது மனைவி சந்திராவதிக்கு, கோவில்பட்டி வட்டம், ஆலம்பட்டி வருவாய் கிராமத்தில் (1) சர்வே எண். 233/1B1-ல் விஸ்தீரணம் 23½ சென்ட் மற்றும் (2) 233/1A9-ல் விஸ்தீரணம் 13½ சென்ட் இடம் சொந்தமாக உள்ளது. அந்த இடத்தை வீட்டு மனைகளாக பிரித்து, DTCP அப்ரூவல் பெற்று விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறேன். அதற்கு முதலில் கோவில்பட்டி தாசில்தாரிடம் தடையில்லா சான்று பெறவேண்டும் என்பதால், நான் கடந்த 28.03.2023 அன்று கோவில்பட்டி தாசில்தார் அவர்களுக்கு, தடையில்லா சான்று கேட்டு (NOC), எனது மனைவி பெயரிலான மனுவினை, பதிவு தபால் மூலம் அனுப்பி வைத்தேன். என் மனைவிக்கு உடல்நிலை சரியில்லை என்பதால் இது சம்பந்தமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவும், முடிவெடுத்து கொள்ளவும் எனக்கு அதிகாரம் அளித்து 29.03.2023ம் தேதியில் அங்கீகார கடிதம் வழங்கியுள்ளார். அதன் பின்பு நான்கு நாட்கள் கழித்து கோவில்பட்டி தாலுகா அலுவலகம் சென்று அங்கிருந்த துணை வட்டாட்சியர் அவர்களை பார்த்து, எனது மனைவி பெயரிலான மனு பற்றி கேட்டேன். அதற்கு அவர் எனது மனைவி பெயரிலான மனு மீது கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆகியோரின் பரிந்துரை பெறவேண்டும் என்று சொன்னார். நான் ஏப்ரல் மாதக் கடைசியில் ஆலம்பட்டி கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கோவில்பட்டி வருவாய் ஆய்வாளர் ஆகியோரிடம் எனது மனைவி பெயரிலான மனு சம்பந்தமான வேலைகளை முடித்தேன். வருவாய் ஆய்வாளர் என்னிடம் அவரது அறிக்கையை தானே தாலுகா அலுவலகத்திற்கு அனுப்பி வைத்துவிடுகிறேன் என்று சொன்னார். பின்பு நான் 22.05.2023ம் தேதி கோவில்பட்டி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்று செக்ஷன் கிளார்க் அவர்களிடம் எனது மனைவி பெயரிலான மனு பற்றி கேட்டேன். அவர் இன்று தான் உங்களுடைய தபால் வந்துள்ளது, இனிமேல் தான் வட்டாட்சியர் அவர்களின் பார்வைக்கு வைப்போம் என்று சொன்னார்கள். நானும் சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் 29.05.2023ம் தேதி காலை சுமார் 11.30 மணிக்கு கோவில்பட்டி தாலுகா அலுவலகம் சென்று தாசில்தார் திருமதி.வசந்த

மல்லிகா அவர்களை நேரில் பார்த்து என் மனைவி சந்திராவதியின் பெயரில் கேட்கப்பட்ட தடையில்லா சான்று சம்மந்தமான மனு பற்றி கேட்டேன். அதற்கு அவர் உங்களுடைய இடத்தை 25.05.2023ம் தேதியன்றே பார்வையிட்டு விட்டேன். மனுவுடன் உங்கள் மனைவியின் வாக்குமூலம் இல்லை. உடனே VAO, RI அவர்களிடம் சென்று உங்கள் மனைவியின் வாக்குமூலத்தை பதிவு செய்து சான்று வாங்கி வாருங்கள் என்று என்னிடம் சொன்னார். உடனே நான் அன்றைய தினமே ஆலம்பட்டி VAO அவர்களை போய்ப்பார்த்து தாசில்தார் சொன்ன விபரத்தை சொல்லி என் மனைவியின் வாக்குமூலத்தை நேரிடையாக பதிவு செய்து VAO சான்று பெற்றேன். அதன் பின் அன்றே அந்த வாக்குமூலத்தில் வருவாய் ஆய்வாளரிடம் மேலொப்பம் பெற்று, அதனை 29.05.2023ம் தேதியன்றே மதியம் சுமார் 02.30 மணிக்கு கோவில்பட்டி தாசில்தார் அவர்களை தாசில்தார் அலுவலகத்தில் வைத்து நேரில் சந்தித்து கொடுத்தேன். தாசில்தார் அவர்கள் என்னிடம் "நான் பார்த்து போட்டு வைக்கிறேன் உங்கள் செல் நம்பர் தாருங்கள்" என்று எனது செல் நம்பர் 9442512378-யை கேட்டு வாங்கி கொண்டார். நான் கோவில்பட்டி தாலுகா அலுவலகத்திலிருந்து கிளம்பி வெளியே வந்த உடன் தொலை பேசியில் 8610798935 என்ற எண்ணிலிருந்து என்னை ஒருவர் தொடர்பு கொண்டு, "நான் தாசில்தார் டிரைவர் கிருஷ்ணன் பேசுகிறேன், தாசில்தார் மேடம்தான் உங்க போன் நம்பரை கொடுத்து உங்களிடம் பேச சொன்னாங்க" என்று என்னிடம் சொன்னார். நான் என்ன விசயம் என்று கேட்டதற்கு அவர் "தாசில்தார் மேடம் என் மூலமாக தான் பணம் எல்லாம் வாங்குவார்கள், நீங்கள் உங்கள் மனைவி பெயரில் கேட்ட தடையின்மை சான்றுக்கு எவ்வளவு பணம் கொடுப்பீர்கள்?" என்று கேட்டார். அதற்கு நான் அவரிடம் இப்போதுதான் முதல் தடவையாக NOC apply பண்றேன். மேலும் அது என்னுடைய சொந்த இடம் தான். நான் ஒன்றும் விலைக்கு வாங்கி பிளாட் போடவில்லை. அதனால் எதுக்கு பணம் தரவேண்டும் என்று கேட்டேன். அதற்கு டிரைவர் கிருஷ்ணன் நீங்கள் பணம் தந்தால் தான் வேலை நடக்கும், நான் வேண்டுமானால் எவ்வளவு பணம் என்று தாசில்தார் மேடத்திடம் கேட்டு சொல்கிறேன் என்று என்னிடம் சொல்லிவிட்டு போனை வைத்துவிட்டார். பின்பு 30.05.2023ம் தேதி மதியம் சுமார் 2 மணிக்கு தாசில்தாரின் டிரைவர் கிருஷ்ணன் மீண்டும் என்னை போனில் கூப்பிட்டு எனது மனைவி பெயரில் NOC கொடுப்பதற்கு தாசில்தார் மேடம் 40 ஆயிரம் ரூபாய்

கேட்கிறார்கள் என்று சொன்னார். நான் என்னால் பணம் எல்லாம் கொடுக்க முடியாது என்றும், நானே தாசில்தார் மேடத்தை நேரில் பார்த்து பேசுறேன் என்றும் அவரிடம் சொல்லிவிட்டு போனை வைத்துவிட்டேன். பின்பு நான் 31.05.2023ம் தேதி மதியம் சுமார் 1.15 மணிக்கு கோவில்பட்டி தாலுகா அலுவலகம் சென்று தாசில்தார் அவர்களை நேரில் சந்தித்து NOC வாங்குவதற்கு தாங்கள் ரூபாய் 40 ஆயிரம் கேட்டதாக உங்கள் டிரைவர் கிருஷ்ணன் என்பவர் சொன்னார் என்று சொன்னேன். அதற்கு தாசில்தார் என்னிடம் “இங்கு அப்படித்தான் ஓடிக்கொண்டிருக்கிறது என்றும் அதனால் தான் அவர் அப்படிச் சொல்லியிருப்பார்” என்றும் சொன்னார்கள். உடனே நான் தாசில்தார் மேடத்திடம் என்னால் அவ்வளவு பணம் எல்லாம் கொடுக்க முடியாது மேடம் என்று சொன்னேன். அதற்கு தாசில்தார் மேடம் என்னிடம் “என் டிரைவர்கிட்ட சொல்லியிருந்த தொகையில் 10 ஐ குறைத்து 30 ஆயிரம் தாருங்கள், உடனே NOC கொடுத்துவிடலாம்” என்று சொன்னார். நானும் சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். ஏற்கனவே உடல் நலம் சரியில்லாத எனது மனைவிக்கு திடீரென உடல்நிலை மோசமானதால் அவரை அருகில் இருந்து கவனித்துக்கொள்ள வேண்டியதாகிவிட்டது. நான் மீண்டும் 12.06.2023 காலை சுமார் 09.45 மணியளவில் கோவில்பட்டி தாசில்தார் அலவலகத்திற்கு சென்று தாசில்தார் அவர்களின் டிரைவர் திரு.கிருஷ்ணனை சந்தித்தபோது, அவர் என்னிடம் தாசில்தார் மேடத்திடம் உங்கள் பேப்பர் ரெடியாக இருக்கிறது,. நீங்கள் மேடத்திடம் பணத்தை கொடுத்துவிட்டு உங்கள் பேப்பரை வாங்கி செல்லுங்கள் என்று கூறினார். நான் உடனே அவரிடம் சரி பணத்தை ரெடிபண்ணிவிட்டு வருகிறேன் என்று சொன்னேன். அதற்கு அவர் இரண்டு நாட்களுக்குள் கண்டிப்பாக வந்துவிடுங்கள் என்று சொன்னார். நானும் அவரிடம் சரி என்று சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்து விட்டேன். நேற்று 13.06.2023ம் தேதி இதுபற்றி என் மனைவியிடம் சொன்ன போது அவளுக்கும் லஞ்சம் கொடுத்து NOC வாங்குவதில் விருப்பம் இல்லை. எனவே இதுபற்றி லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் கொடுத்துவிடலாம் என்று முடிவு செய்தோம். எனது மனைவியின் பெயரில் உள்ள இடத்துக்கு NOC வழங்க என்னிடம் ரூபாய் 30 ஆயிரம் லஞ்சம் கேட்கும் கோவில்பட்டி தாசில்தார் திருமதி.வசந்த மல்லிகா மற்றும் அவரது டிரைவர் திரு.கிருஷ்ணன் ஆகியோர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் கோவில்பட்டி தாலுகா அலுவலகத்திற்கு தபால்

மூலம் அனுப்பிய எனது மனைவி சந்திராவதி பெயரிலான 28.03.2023ம் தேதியிட்ட மனுவின் நகல், ஒப்புகைசீட்டின் நகல், பட்டா எண்:1607-ன் நகல், கோவில்பட்டி சார்பதிவக ஆவண எண் 3284/1988-ன் நகல் மற்றும் எனது மனைவி சந்திராவதி 29.03.2023ம் தேதியில் எனக்கு அளித்துள்ள அங்கீகார கடிதம் ஆகியவற்றையும் இணைத்துள்ளேன். தாசில்தார் திருமதி.வசந்தமல்லிகா மற்றும் டிரைவர் திரு.கிருஷ்ணன் ஆகியோரை கையும் களவுமாக பிடிக்க முழு ஒத்துழைப்பு தருவேன் என தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிக்கு xxxxxx s/d., (கி.ராஜாராம்), நாள் 14.06.2023. Sir, Received by me on 14.06.2023 at 08.00 hrs & verified the antecedents of both the complainant and the Accused, and after getting the oral permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti-Corruption, Chennai and I registered a case in Thoothukudi V&AC Cr.No.04/2023 u/s 7 r/w 12 of the Prevention of Corruption Act 1988 as Amended in 2018 at 08.30 hrs. xxxxxx s/d., 14.06.2023 (J.ANITHA), Inspector of Police, V&AC, Thoothukudi. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, வாதியின் அசல் புகார் மனு மற்றும் இணைப்புகள் ஆகியவற்றை இணைத்து கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

J. Anitha
14/6/23.
Inspector of Police,
V&AC,
Thoothukudi.